Phone No 450
விலை அரை அணா
Regd. No.M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (8—2—50) வெளியூர் (9—2—50) [இதழ் 163

மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பு தருவதே நாடு நலம்பெற வழி

இணையற்ற பண்பாடு இடைக்காலத்தில் சிதறிவிட்டது

குவலயம் உய்ய குறளே வழிகாட்டி

திருவள்ளுவர் விழாவில் :: :: ஓமந்தூரார் சொற்பொழிவு

ஒவ்வொருவரும் பொது வாழ்வில் தனது கடமையை உணர்ந்து, பகைவராலும் பிறர் சொல்லும் யோசனைகளுக்குச்செவிசாய்த்து நல்லவை எவை எனக்கண்டு, அதன் படிநடந்து, தனது உரிமைகளைப் பயன்படுத்தினால்தான் நாடு நலம் பெறும்.

நாட்டுக்கு சேவை செய்ய திருவள்ளுவர் குறள் மூலம் நமக்கு நல்வழி காட்டியிருக்கிறார். அந்நூலின் கொள்கையை வள்ளுவர் தம்வாழ்க்கையிலும் நடத்திக் காட்டியுள்ளார். அவர் காலத்தில் அரசனும் ஆண்டியும் ஒன்று என்ற பண்பாடு இருந்து வந்தது, பிற்காலத்தில் அப்பண்பாடு சிதறடிக்கப்பட்டுவிட்டது.

இவை, புரசை திருவள்ளுவர் விழாப்பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த முன்னாள் அமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமியார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களாகும். வள்ளுவர் தந்த அறிவுரையை, மக்களுக்கு அறிவுறுத்தும் முறைதான் அன்பர் ஓமந்தூரார் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் தமிழரின் சிந்தனையைக் கிளறக் கூடியவை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில், நல்ல கருத்துரைகளை நாட்டிற்கு நல்கியிருக்கிறார் அவர்.

பொதுவாழ்வில் மக்கள் தத்தம் கடமைகளைச் செவ்வனே ஆற்ற வேண்டும் என்பதை உணர்த்தப் புகுந்த ஓமந்தூரார், வள்ளுவர் வாக்கை மேற்கோள் காட்டியதுமாத்திரம் அல்லாமல் வள்ளுவர் கருத்தையும் தெளிவாக விளக்கிக்காட்டியுள்ளார்.

பகைவராயினும் பிறர் சொல்லும் யோசனைகளுக்குச் செவிசாய்த்துப் பயனடைய வேண்டும் என்பதை அவர்வற்புறுத்திக் கூறியிருக்கிறார் 'எப்பொருள்யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் வள்ளுவர்வாக்கிற்கு இவ்வுரை ஒரு விளக்கவுரையெனலாம்.

பகைவராயினும் அவர்தம் கருத்தை அறிவது அவசியமாம், ஆம்; முற்றிலும் உண்மை, அதிலும் அரசியலில் ஈடுபடுவோர் இவ்வறவுரைக்கு அவசியம் செவிசாய்த்தல் வேண்டும். அரசியலில் கருத்து வேறுபாடுகள் பல இருப்பது இயல்பு. இக்கருத்து வேறுபாடுகளைப் பகைக்கண் கொண்டு பார்ப்பது அறிவுடையோர் செயலன்று. கருத்து வேறுபாட்டுக்கும், பகைமைக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை உண்டு. கருத்து வேறுபாடுகள் ஆக்க வேலைக்கு வழிகோலுவனவாகும். பகைமை உணர்ச்சி அழிவுக்கே ஆக்கந்தரும்.

எனவே பகைமை ஒழிக்கப்படவேண்டுவதொன்றாகும்.

ஆனால், வருந்தத்தக்கவிதத்தில் இந்நாட்டில் கருத்து வேறுபாட்டுக்கும், பகைமைக்கும் வித்தியாசமே தெரிவதில்லை பலருக்கு இதனால் காலப் போக்கிலே கருத்து வேறுபாடுகூட பகைமையாக உருக்கொண்டு, பல ஆக்க வேலைகளுக்கு ஊறு செய்கின்றன. இந்நிலை மாறவேண்டும். மாறவேண்டுமானால் வள்ளுவர் காட்டிய வழியை வகைப்படுத்திக்காட்டும் ஓமந்தூரார்போன்றவர்களின் அறிவுரையை நாடாள்வோரும், பிறரும் ஏற்றுக்கொள்ள வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும். 'பகைவராயினும் அவர் சொல்லில் பயன் காண வேண்டும்' என்று சொல்லப்படும்போது, இந்நாட்டில்—வள்ளுவர் தோன்றிய நாட்டில் கருத்து வேற்றுமை காரணமாக நாட்டின் எதிர்காலத்தை மறந்து, இனியும் நாம் பிரிந்து வாழ்வது சரியா என்பதை மாற்றுக்கட்சித்தோழர்கள் உற்று உணர்ந்து பார்க்கவேண்டும்.

மேலும் ஓமந்தூரார் சுட்டிக் காட்டியிருப்பதுபோல் அரசனும் ஆண்டியும் ஒன்றெனக் கருதும் நிலை ஏற்படவேண்டுவது மிக மிக அவசியமானது, அவசரமான பிரச்னையும்கூட. வள்ளுவர் காலத்தில் முடியாட்சி இருந்திருக்கலாம். ஆனால் அதனால் குடிமக்கள் வாழ்வு பாதிக்கப்பட்டதில்லை. சமத்துவம் நிலவியிருந்த காலம் அது. இன்றைய நிலை அதுவல்ல. இன்று முடியாட்சி நீக்கி, குடியாட்சி நிலவுவதாகப் பறைசாற்றப்படுகிறதே யன்றி, குடியாட்சிக்குரிய பலனை நாம்காணமுடியவில்லை. ஜனநாயக ஆட்சி என்றபோர்வையில் முடியாட்சியினும் கொடிய யதேச்சதிகார ஆட்சி நடைபெறுகிறது.

இந்நாட்டில் வள்ளுவர் சரியானபடி போற்றப்பட்டிருந்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கோல்வால்கர் "கொடும்பாவி" கொளுத்தப்பட்டது

அவுரங்காபாத்தில் கருப்புக்கொடி ஊர்வலம்!

ஆர். எஸ். எஸ். தலைவருக்கெதிராக சமதர்மக் கட்சித் தோழர்கள் ஆர்ப்பாட்டம்

கடந்த 5-2-50ல் அவுரங்காபாத்துக்கு வந்து சேர்ந்த ரா. சு. சே. சங்கத் தலைவர் தோழர் கோல்வால்கருக்கு எதிராக, சோஷலிஸ்டுகள் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர், சமதர்மக் கட்சியும், தாழ்த்தப்பட்ட வகுப்புக் கழகமும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டன. இவ்விரு இயக்கத்தாரும் கூடி ஓர் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். பின்னர் நகர சமதர்மக் கட்சிக் காரியாலயத்தின் முன், தோழர் கோல்வால்கரின் உருவப்படம் ஒன்றைச் சுட்டெரித்தனர். குழப்பம் நேராதிருக்க போலீஸ் பாதுகாப்பு அமைக்கப்பட்டிருந்தது. கோல்வால்கர் உருவப்படம் எரிக்கப்பட்டதானது தென்னாட்டில் 'கொடும்பாவி' கொளுத்தும் நிகழ்ச்சிக்கு ஒப்பாகச் சொல்லலாம்.

தோழர் ஜெயப்பிரகாஷ் சீனு செல்வார் ?

சமதர்மக் கட்சித் தலைவர் தோழர் ஜயப்பிரகாஷ்நாராயண் கூடிய விரைவில் சீனு செல்லக்கூடுமெனத் தெரிகிறது. யு. பி. நிருபர் அவரைச் சந்தித்து கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்:—

"சீனுவில் என்ன நடக்கிறது என்பதை அறியவும், புதிய சீனுவின் தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்புகிறேன். அது பற்றி ஆலோசித்து வருகிறேன். ஆனால் நான் புறப்படுவதற்குச் சிறிது காலம் செல்லும்" என்று கூறினார்.

சிங்கப்பூர்—லண்டன்

25 மணி நேரப் பிரயாணம்

சிங்கப்பூர், பிப். 7—
மணிக்கு 490 மைல் போகக் கூடிய புது பிரிட்டிஷ் ஜெட் விமானம் சிங்கப்பூருக்கு இலண்டனிலிருந்து கடைசியில் வந்து சேரும் என்று தெரிகிறது. லண்டனிலிருந்து சிங்கப்பூருக்கு இவ்விமானம் 25 மணி நேரத்தில் வந்து சேருமாம்.

செஞ்சீனாவின் ராணுவ ஆதிக்கத்தை ரஷ்யா கோருகிறதாம்!

லண்டன், பிப். 7—
கம்யூனிஸ்டு சீனாவின் 10 லட்சம் பேர் கொண்ட இராணுவம் தன் ஆதிக்கத்தின் கீழ் தான் இருக்க வேண்டும் என்று மாசேதுங்கிடம் மார்ஷல் ஸ்டாலின் கோருவதாக மாஸ்கோவிலிருந்து இங்கு கிடைத்துள்ள திட்டமான செய்திகள் கூறுகின்றன.

ஹங்கேரி ருமேனியா, பல்கேரியா, ஜெக்கோஸ்லாவியாவில் சோவியத் பயிற்சி பெற்ற ரஷ்ய அதிகாரிகள் தலைமையில் ராணுவம் இருப்பது போல், செஞ்சீனாவிலும் ராணுவம் இருக்கவேண்டும் என்பதே கிரெம்ளின் கோருகிறதாம்.

மாஸ்கோவில் சீன கம்யூனிஸ்டு தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நீடித்து நடக்க பல காரணங்களில் இது ஒன்றாக இருக்கலாம் என்று நம்பப் படுகிறது.

திபேத் பிடிபட்டால் நேபாளம் கம்யூனிஸ்டுகள் வசமாகும்

'கிளாஸ்கோ ஹெரால்ட்' கருத்து

லண்டன், பிப். 7—
திபேத்தில் கம்யூனிஸ்டு பிரசாரம் செய்து, அதைக் கைப்பற்றிவிடுவது சீன கம்யூனிஸ்டுகளால் சாத்தியமாகும் பட்சத்தில், நேபாளம் போன்ற மலைகளடர்ந்த பிரதேசங்களிலும் கம்யூனிஸ்டுகள் முன்னேறுவதைக்காட்டுவது எளிதாகிவிடும் என்று, 'கிளாஸ்கோ ஹெரால்ட்' பத்திரிகை தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பொதுத்தேர்தல்

லண்டன், பிப். 5—
பிரிட்டிஷ் பொதுத்தேர்தலுக்கு எவ்வளவு செலவிடப்படும் என்பது பற்றி இப்பொழுது தெரியவந்திருக்கிறது, இத்தடவைசெலவழிப்பது இதற்கு முன்பு செலவிட்டதைவிட மிகமிகக் குறைவாகவே செலவிடப்படும் என்று கூறப்படுகிறது. தேர்தல் செலவை மிகவும் குறைக்க வேண்டும் என்ற புது சட்டப்படி இவ்வருஷம் 750,000 பவுன் வீதம் தான் செலவிடப்படும்.

செவ்வாய்க் கிரகத்திலும் அணுக்குண்டா?

லண்டன், பிப். 7—
செவ்வாய்க்கிரகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெடி விபத்திற்குக் காரணம் என்னவாக இருக்கலாம் என்பது பற்றி விஞ்ஞான நிபுணர்கள், மூளையைக் குழப்பிக்கொண்டு பதில் கண்டுபிடிக்க முயன்றுவருகின்றனர்.

ஸர் ஹெரால்ட் ஸ்பென்ஸர் ஜோனஸ் என்கிற விஞ்ஞானி எழுதியுள்ள கட்டுரையில் அங்கு பூகம்பமோ அல்லது எரிமலையோ ஏற்பட்டிருக்க நியாயமில்லை என்று கூறுகிறார். "அங்கு யாராவது வசிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அணுக்குண்டு ரகசியம் தெரிந்திருக்க வேண்டும் என்றும், ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் செவ்வாய்க்கிரகவாசிகள் நம்மீது அணுக்குண்டுகளை வீசவே போகின்றனர் என்றும், செல்வதற்கும் யாரும் வசிக்கும்படி அங்கு பிராணவாயு இருப்பதாகத் தெரியவில்லையே" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாலை மணி

சென்னை 8—2—50 புதன்கிழமை

வீரமுமல்ல, :: விவேகமுமல்ல !

தென் ஆப்பிரிக்கா மீது போடப்பட்டிருந்த பொருளாதார நிர்ப்பந்தத்தைப் பிப்ரவரி 6-ம் நாளிலிருந்து மீட்சி (வாபஸ்) பெறுவதென்ற முடிவுக்கு வந்து, அதன்படியே செயலாற்ற முற்பட்டிருக்கும் பாகிஸ்தான் போக்கு பற்றிப் பலதரப்பட்ட கருத்துக்கள், அரசியல் அரங்கிலே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

தென்ஆப்பிரிக்கா அரசாங்கம் வழிக்கு வருவதற்கு முன்னர், தான் விதித்திருக்கும் பொருளாதார நிர்பந்தத்தை, மீட்சிபெறுவதற்கில்லை என்று, இந்திய சர்க்கார் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள்.

இன துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியர்களுக்குக் கொடுமைகள் இழைக்கும் வகையில், சட்டங்கள் — நிறைவேற்றி, தென் ஆப்பிரிக்கா யூனியன் அரசாங்கம் கொடுங்கோலாட்சி நடத்தி வரத் தொடங்கிய காலத்தில், பிரிவினை கொள்ளாமல் ஒன்றாக இருந்த இந்தியா, தென் ஆப்பிரிக்காவுடன் கொண்டிருந்த வர்த்தக உறவுமுறையில் ஒருவித பொருளாதார நிர்பந்தத்தை ஏற்படுத்த எண்ணிற்று. அதன்படி 1946 ஜூன் 15-ம் நாளிலிருந்து ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குத் தடைவிதித்து தென் ஆப்பிரிக்காவுடன் கொண்டிருந்த வர்த்தகத்தை ஸ்தம்பிக்கச்செய்தது. நாட்டுப் பிரிவினை ஏற்பட்ட பிறகும், இரண்டு நாடுகளும், தனித்தனியே, தென் ஆப்பிரிக்கா மீது பொருளாதார நிர்பந்தத்தை ஏற்படுத்தி வரும் போக்கினைக் கைவிடவில்லை.

தென் ஆப்பிரிக்கா பிரச்னை ஏதாவதொரு நல்ல முடிவுக்கு வரவேண்டி, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளின் வட்டமேஜை மாநாடு நடத்த வழியேதும் இருக்கிறதா என்று கண்டறிவதற்காக பிப்ரவரி 6-லிருந்து முக்கூட்டு மாநாடு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. முக்கூட்டு மாநாடு சுமுகமாக நடைபெறுவதற்காகவே பொருளாதார நிர்ப்பந்தத்தை மீட்சி பெற்றுவிட்டதாகப் பாக்கிஸ்தான் கூறுகிறது. இதுவு மன்னியில் சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாள் தென் ஆப்பிரிக்கா அரசாங்கம் பொருளாதார நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதைக் கைவிட்டுவிடும்படியாக, இந்தியா பாகிஸ்தான் இரு அரசாங்கங்களையும் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு இணங்க நடந்தால் சுமுக நட்புரிமையோடு சட்டிக்கலந்து பேசவும் தடையையிக்கிவிட்டதாகப் பாகிஸ்தான் கூறுகிறது. பிரச்சினை தீராதவகையில், தடை நீக்குவதற்கில்லை என்று கூறிவிட்டது.

பாகிஸ்தான் தன் போக்கை மாற்றிக் கொண்டதற்குக் கூறும் காரணங்கள் பொருந்துமா. பொருந்தாதா என்ற ஆராய்ச்சியில் இறங்குவதைவிட, தன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய அளவுக்கு ஏற்பட்ட சூழ்நிலையின் தன்மை என்ன என்பதை அறிய வேண்டியது அவசியமாகும்.

தேசியத் தலைவர்களும், தேசியத் தாள்களும் முக்கியமாகக் குறிப்பிடுவது, பாகிஸ்தான் சுயநல எண்ணங் கொண்டு. சொந்த வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ளவே இந்த ஏற்பாட்டைச் செய்ய முனைந்திருக்கின்றது என்பதாகும்.

ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகள் காலமாக பொருளாதார நிர்ப்பந்தக் கொள்கையைத் தென்ஆப்பிரிக்கா வைப் பொறுத்த வரையில் கடைப்பிடித்து வந்த பாக்கிஸ்தான், இப்பொழுது தன் போக்கை மாற்றிக்கொள்வானேன்? மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தில் அதனை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தியவர்கள் யார்? ஏன் இந்த சூழ்நிலை ஏற்பட்டது? என்பனபோன்ற கேள்விகளை எழுப்பினால் அவற்றிலிருந்து கிடைக்கும் விடையிலிருந்து, தென்ஆப்பிரிக்கா நாடு வர்த்தக உறவைப் புதுப்பித்துக்கொண்டால் தான், தனக்கு வாழ்வுஉண்டு, இல்லையென்றால் வாழ்வில்லை என்று கருதும்படியான நிலைமை பாக்கிஸ்தானுக்கு ஏற்பட்டுவிட்டது-இல்லை ஏற்படுத்தப்பட்டுவிட்டது. அந்தச் சூழ்நிலையை இந்தியா உண்டாக்கிக் கொடுத்தது என்றால் அது மிகையாக இருக்க முடியாது.

பாகிஸ்தானோடு சுமுகமான உறவு முறையைக் கைக்கொள்ள வழி தேடாது, வீம்பினை முதலாக வைத்துக் கொண்டு, பாகிஸ்தான் மீது பொருளாதார நிர்பந்தத்தைப் போட இந்தியா நடவடிக்கை எடுக்கத் தொடங்கிய பிறகு தான், பாகிஸ்தான் தன் போக்கினைத், தன் நாட்டின் நல்வாழ்வை எண்ணி மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று கூறலாம்.

இந்தியா பாக்கிஸ்தானுக்கு நிலக்கரியை ஏற்றுமதி செய்ய மறுத்துவிட்டது; பாக்கிஸ்தானிலிருந்து சணலை இறக்குமதி செய்யவும் மறுத்துவிட்டது. இந்த நிலையில் தேவையான நிலக்கரியையும் பெறுமலும். மிதமிஞ்சிய சணலை ஏற்றுமதி செய்ய முடியாமலும் தவித்துக் கொண்டிருந்த பாக்கிஸ்தான், தன்னுடைய நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள தென்ஆப்பிரிக்காவை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது போலும் என்றால், அதில் தவறிருப்பதாகக் கருத இடமில்லை தன்னிடத்திலே மிதமிஞ்சிக் கிடக்கும் சணலைத், தென்ஆப்பிரிக்காவுக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக நிலக்கரியைப் பெற பாக்கிஸ்தான் எண்ணியிருக்கவும் கூடும். சூழ்நிலையானையும் அந்த முடிவுக்குத் தானே கொண்டு வந்துவிடும்.

தன்போக்கை மாற்றிக் கொள்ள பாக்கிஸ்தான் தானே விரும்பிற்று என்று சொல்வதைக்காட்டிலும், போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலையில் கொண்டு வந்து வைத்திருப்பது இந்தியா எனில் அது மிகையாகாது.

பாக்கிஸ்தானுக்கு, வீம்பு. திறமையற்ற தன்மை காரணமாகப் பல நெருக்கடிச் சூழ்நிலைகளை ஏற்படுத்திவிட்டுப், பிறகு அந்தச் சூழ்நிலையிலிருந்து அந்த நாடு வெற்றிகரமாக வெளியேறிவிட்டால், அதுகண்டு வயிற்றெரிச்சல் கொள்வது வீரமுமல்ல விவேகமுமல்ல !

நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, உண்மை நிலையைத் தெளிந்து, விவேக வழிகளில் செயலாற்றிச் சென்றிருந்தால், தன்னையே பல வழிகளிலும். பாதிக்கும் குறையுடைச் செயல்கள் நிகழும்நிலைமைகள் ஏற்பட்டிருக்காது; இந்தியா—பாக்கிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே அன்பு இடை நிலைப் பொருளாக இருந்திருக்கும்; இரண்டு நாடுகளும் வெட்டிமடியாமல். வாழ்ந்துயர வகை ஏற்பட்டிருக்கும். இனியேனும் அந்த வகையைக் காண இந்தியா முயலுமா ?

கிழக்கு—மேற்கு மிரட்டல் யுத்தம் வலுக்கும்

லண்டன், பிப் 7—

கடந்த ஒரு மாதத்தில் நடந்த சம்பவங்களைக் கவனித்தால், கிழக்கு-மேற்கு மிரட்டல் யுத்தம் வலுத்து சீக்கிரமே உச்ச நிலையை அடையும் என்று இங்குள்ள ராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகிறது. இந்தக் கருத்து ஏற்பட கூறப்படும் காரணங்களாவன :—

(1) மாஸ்கோவில் சீன-சோவியத் பேச்சுவார்த்தைகள்.

(2) ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்தது.

(3) பெர்லின் போக்குவரத்தில் ரஷ்யா ஏற்படுத்தியுள்ள புது தடைகள்.

அறிவுக் கதிர்

மதச்சடங்குகளில் மனிதனுக்கு விருந்துண்ணவும், பட்டினி கிடக்கவும் சமசந்தர்ப்பம் இருக்கிறது; ஆகவே பணக்காரர்கள் விருந்தையும், ஏழைகள் பட்டினியையும் வழிபடுகிறார்கள் !

—சிட்னிஸ்மித்

வைத்திய வள்ளலின் மறைவு

மக்களின் ஆற்றொணாத் துயரம்

சவ ஊர்வலமும் இறுதி மரியாதையும்

ஈரோடு, பிப் 6—

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த பெருந்தகை, பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள், 4-1-50 சனியன்று மாலை 4-30 மணிக்குப்புதிதாக குடியேறிய தனது இல்லத்தில் மறைவெய்தினார். உடனே அதுபோது சென்னையிலே இருந்த, அவரது உடன் தோன்றல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கும், தோழர் சி. என். ஏ. அவர்களுக்கும், சென்னை, சேலம், திருச்சி முதலிய இடங்களுக்கும் தந்திச் செய்திகள் அனுப்பப்பட்டன. பெரியார் ஈ வெ ரா. அவர்கள் மாலை 5-30 மணிக்கு சென்னையினின்றும் புறப்படும் புகைவண்டி மூலம் புறப்பட்டு வந்துசேர்ந்தார். தோழர் சி. என். அண்ணாதுரை, அவர்களுக்கு இரவு 10 மணிக்குத்தான செய்தி கிடைத்ததாம். இரவு 2 மணிக்கு, அண்ணா அவர்கள் தனது நண்பர்களுடன் காரில் புறப்பட்டு. காலை 9-45 மணிக்கு ஈரோடு வந்தடைந்தனர். காலஞ்சென்ற ஈ வெ. கி அவர்களின் தங்கை. கண்ணம்மையார் அவர்கள், தந்திச் செய்தி கேட்டு, கோவையிலிருந்து இரவு 1 மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தார். மற்றும் காலை 12-மணி வரை, வெளியூர்த் தோழர்கள் கார்களிலும், ரயில் மூலமும் வந்த வண்ணமே இருந்தனர்.

பகல் 12-மணிக்கெல்லாம். மறைந்த பெரியாரின் உடலை எடுத்துச் செல்வதற்கான, சிங்கார ரதம் மலர்களினால் அலங்கரிக்கப்பட்டு, வாயிலிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. பெரியார் ஈ. வே. ரா, குடும்பத்தின் மாப்பிள்ளை எஸ். ராமசாமி, சம்பந்தியார் திருப்பத்தூர் சாமிநாயுடு, மருமகன்மார்கள் கஜேந்திரன் ராஜூ ஆகியோர், வெளி முற்றத்தில் வீற்றிருந்தனர்.

தோழர்கள், ஈ. வே. கி. சம்பத், ஈ. வே. கி செல்வன் எஸ். ஆர். சங்கானம் ஆகியோரும் அருகிருந்தனர். நண்பகல், கடுமையான வெய்யிலாயிருந்தும். நாழிகை ஏற ஏற ஆயிரக்கணக்கில் உள்ளூர் வெளியூர்த் தோழர்களும், தாய்மார்களும் கூடிவிட்டனர். 12-30 மணிக்கு பெரியார் ஈ வெ. கி, அவர்களது உடல் ரதத்தில் வைக்கப்பட்டு உறவினர்களாலும், நண்பர்களாலும், மெதுவாகத் தள்ளப்பட்டு புறப்பட்டது பெரியார், ஈ வெ. ரா, எஸ் ராமசாமி, சாமிநாயுடு, ஈ வெ. கி. சம்பத், ஈ வெ. கி. செல்வன் ராஜூ, கஜேந்திரன், சந்தானம், சரிவரதசாமி ஆகிய உற்றாரும், தோழர்கள் சி என். அண்ணாதுரை, ஏ சித்தையன், திருச்சி என். சங்கரன், என். சாம்ப, வானமாமலை, ராமச்சந்திரம், சேலம், ரோசு, அருணாசலம், ஆனைமலை, நரசிம்மன், காஞ்சி. ராஜகோபால் சென்னை டி. எம். பார்த்தசாரதி, கே கோவிந்தசாமி, கட்டிப்புட்டலவர் கே. ஆர். இராமசாமி, சண்முகவேலாயுதம், மாணிக்கம், பட்டுக்கோட்டை டேவிஸ். ஈஸ்வரன் எம். எல். ஏ, முன்னாள் ஈரோடு சேர்மன் ஷேக்தாவுத் மற்றும், முனிசிபல். கமிஷனர் நகர சபை உறுப்பினர்கள் இதர உத்தியோகஸ்தர்கள் மற்றும், திராவிட முன்னேற்றக்கழகம் திராவிடர்கழகம் காங்கிரஸ் மற்றும் பல இயக்க தோழர்கள் ,வியாபாரிகள், ஆகிய அனைவரும், புடைசூழ பல முக்கிய தெருக்கள் வழியே ரதம் சென்று சரியாக 2-30 மணிக்கு சத்திரப் பகுதியில் அமைந்துள்ள சமாதி வந்தடைந்தது. வழிநெடுக, பலஇடங்களில் புகைப் படங்கள்எடுக்கப்பட்டன. தெருக்கள்வழியே ரதம் வரும்போது பெரியவர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் வரிசை வரிசையாக வந்து தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவித்தகாட்சி மிக்க மனம் கசிவதாகவே இருந்தது. பின்பு வெட்டப்பட்டிருந்த குழியில் சாந்தம் தவழ்ந்த முகத்துடன் கூடிய வள்ளல் ஈ. வெ. கி. அவர்களதுடல் இடப்பட்டு மண் அடக்கம் செய்யப்பட்டது,பலர்,கடைசியாக தங்களது அனுதாபத்தை சிற்றுரைகள் மூலம் தெரிவிக்க அனைவரும் கலைந்து சென்றனர். (ந-நி)

தோழர் என். வி. என்.

சென்னை, பிப். 7—

அமைப்புக்குழு செயலளர் தோழர் என். வி. நடராசன் சுற்றுப்பயணத்திலிருந்து 5-ந் தேதி திருவண்ணாமலை கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். வைத்திய வள்ளல் மறைவு செய்தி 5—2—50 மாலை தான் தெரியவந்தது. உடனே கூட்டத்தை அதன் காரணமாகஒத்திவைக்குமாறு திருவண்ணாமலை தி. மு. க. செயலாளரிடம் கேட்டுக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு ஈரோட்டுக்கு 6-ந் தேதி காலை சென்றார். மறைந்த வள்ளல் ஈ. வெ. கி. அவர்களின் அருமைத் துணைவியார் தோழர்கள் ஈ வெ. கி. சம்பத். செல்வம், ஆகியோரைக்கண்டு ஆறுதல் கூறிவிட்டு இன்று காலை சென்னைவந்தார். மீண்டும் பொதுச் செயலளர் தோழர் அண்ணாத்துரை அவர்களுடன் மதுரை மாவட்ட சுற்றுப் பயணத்துக்காக 7-ந் தேதி இரவு புறப்பட்டு மதுரைசென்றார்.

பறவைகட்கும் 8 மணி நேர வேலை!

லண்டன், பிப். 7—

மனிதர்கள்மட்டும்தான் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்பதில்லை. பறவைகளும் நாளொன்றுக்கு 8 மணி நேரம்தான் பறக்கின்றன வென்றும் அதற்குப்பின் அவை ஓய்வெடுத்துக் கொள்கின்றன வென்பது ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கழக நடவடிக்கைகள்

ஆம்பூர்:—29—1—50 அன்று தோழர் சம்பத் அவர்கள் தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்களில் முக்கியமான இரண்டு தீர்மானம்.

1. ஆம்பூர் நகரத்தில் மக்கள் நலத்திற்கு ஏதாவது ஓர் பொதுஇடத்தில் பூங்கா ஒன்றை நிறுவும்படியும், அங்கு ஓர் வானொலி அமைக்கும்படியும் அதோடுகூட முக்கியமான ரஸ்தாக்களான புகைவண்டி நிலையத்தில் இருந்து பாலாற்று வரையிலும் கடைவீதி முதலிய பாதைகளை உடனடியாக தார்ரோட் போடவேண்டுமோறு இக்கமிட்டி நகராண்மைக்கழகத்தை மிகவும் வேண்டுகிறது.

2. பிப்ரவரி திங்கள் கடைசி வாரத்தில் தோழர் அன்பழகன் அவர்களை அழைத்து, ஓர் பொதுக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

பெரியகுளம்:— 24—1—50 ல் மாணவர் கழகச் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. அவ்சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1. மாவட்ட கழகத்திற்கு ரூபாய் (50) ஐம்பது அனுப்பப்பட்டது. 2. ஆண்டுவிழாச் செலவு ரூ (120) நூற்று இருபது ஆகுமென முடிவுசெய்யப்பட்டது. 3. ஸ்ரீராசையா, பக்கர் ஆகிய இருவர் செயற்குழுக் கூட்டத்திற்கும் பலதடவை வாராததால் கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டார்கள். பின்பு தொடர்ந்து 25 1 50 மாலை 5 மணிக்கு கமிட்டி ஆண்டு தலைக விழாவிற்கு ஆகும்வேலை குறித்துப் பேசி முடிவு செய்யப்பட்டது.

* * *

சேலம் அம்மாபேட்டை மெயின் ரோடு:—22—1—50 தேதி ஞாயிறு இரவு 8மணிக்கு திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் கழகக் கட்டிடத்தில் திரு டி. என். ராமலிங்கம் அவர்கள் தலைமையில் சொற்பயிற்சி நடைபெற்றது. அதுபோது "மதம் அபினியா" என்னும் பொருள்பற்றி சிறுவன் ரவீந்திரன் மற்றும் தோழர்கள் ஸ்டாலின் கே. இராமசாமி கே. கொண்டய்யா, கே. என். அப்துல்ஹமீம், எ. குமரேசன், அப்துல் சக்கூர். எம். பி. வள்ளியப்பன், ஜீவரத்னம், சன்மானந்தன், கே. எ. தியாகராஜ், முதலிய தோழர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார்கள்.

* * *

விருதுநகர்:— திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—செயற்குழுக்கூட்டம் 23-1 50 திங்கட்கிழமை மாலை என். பி. எஸ். கட்டிடத்தில் தோழர் க. அ. பு. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, மாணவர்முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவினை பிப்ரவரித் திங்கள்கடைசிவாரத்தில் நடத்துவதெனவும், விழாவுக்குத் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களையும், கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. மேற்கண்டவரின் ஒப்புதல் பெற்று விழா நாளினைக் குறிக்கச் செயலாளர் ஏ. கே. சாமிக்கு உரிமையளிக்கப்பட்டது.

* * *

நாகப்பட்டினம்:— 29-1-50 ஞாயிறு காலை 10 மணிக்கு செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1 உறுப்பினர் அழிஞ்சிமங்கலம் கே. சுப்பிரமணியன் அவர்கள் விலக்கப்பட்டு, பதிலாக அம்மங்கலூர் ஆர். நடராசன் அவர்களையும், மேலும் பாங்கிநல்லூர் எம். என். மணி, ஆர். நடராசன் இவர்களையும் செயற்குழு உறுப்பினர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

2 தஞ்சை மாவட்ட முதல் மாநாட்டை நாகப்பட்டினத்தில் கூட்டும்படிய பொதுச்செயலாளர் அவர்களையும், கே. கே. நீலமேகம் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

3 தஞ்சை மாவட்ட மாநாட்டிற்கு இரண்டு பிரதிநிதிகள் வி எம். வேலு, என். எம். தங்கவேலு இவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

மாயூர்சத்திரம்:— தி. மு. க. செயற்குழுக்கூட்டம், 29—1—50 மாலை தோழர் த. ம. தேவதாஸ் செல்லத்துரை தலைமையின் கீழ் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவழைத்து பிப்ரவரியில் ஒரு கூட்டம் நடத்துவதாகவும், மாவட்டத்திற்கு இவ்வூர்க் கிளைக் கழகப் பிரதிநிதிகளாக தோழர்கள் எ. நாடார்கண்ணும். கி. நடராசனும் நியமித்திருக்கிறதென்றும், பிரசாரக் குழுவில் உள்ள, பலருக்கு முடங்கல் பல தீட்டியும் பதில் எழுதாது மௌனம் சாதிப்பது பற்றி மிகமிக வருந்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

திசையன் விளை:—நெல்லை மாவட்ட தி. மு. கழகத்திற்கு திசையன் விளை தி. மு. கழகத்தின் சார்பாக கீழ்கண்டவர்களை பிரதிநிதிகளாக 5—1—50ம் தேதி செயற்குழு கூட்டத்தில் தீர்மானித்து அனுப்பப்பட்டுள்ளது. தோழர்கள். ஆ. ந. திருவடிமுத்து வா. சொக்கலிங்கம்.

* * *

பெரியகுளம்:—திராவிட முன்னேற்ற மாணவக்கழகச்செயலாளர் சு. நடராசன் அவர்கள், இண்டர் கல்வி நடந்த, மதுரைமாவட்ட அண்ணா சுற்றுப்பிரயாணக்கமிட்டிக்கு 17—1—50 சென்றிருந்ததைப்பற்றி ஆராய 18—1—50 மாலை 5-30 மணிக்கு திராவிட முன்னேற்ற மாணவர் கழகக் கமிட்டிக் கூட்டப்பட்டது. அப்பொழுது 11—2—50 ல் வர இருக்கும் தோழர் அண்ணாதுரையைச் சிறப்புடன் வரவேற்று பெரியகுளம் திராவிட முன்னேற்ற மாணவர் கழகத்துவக்க விழாவை நடத்துவது எனத் தீர்மானம் செய்யப்பட்டது.

* * *

ஆரணி:—28-1-50 காலை 9-30க்கு தோழர் சி. ஜெயராமன் அலுவலகத்தில் நகர தி. மு. கிளைக் கழகச் செயலாளர் ஆர். குட்டி அவர்கள் தலைமையின் கீழ் கூடிய செயற்குழுவில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. வடஆற்காடு மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டை வரும் மார்ச் மாதத்தில் ஆரணியில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

2. மாநாட்டை ஆரணியில் நடத்த வடஆர்காடு மாவட்ட தி மு. கழக செயற்குழுவை அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* * *

சிவகாசி:— 22-1-50 ல் செயற்குழுக்கூட்டம் ஆரோன் தங்கையா அவர்கள் தலைமையில் கூ. ச. சு. பெரிய கருப்பநாடார் அவர்கள் நந்தவனத்தில் நடைபெற்றது. அதுபோது, விளம்பர உறுப்பினர் கே. எஸ். பழனிச்சாமி 21-1-50 தேதி எழுதிக்கொடுத்த கடிதத்தின்படி ராஜினாமா ஒப்புக் கொள்ளப்பட்டு, அவருக்குப் பதில் எம். பி. நகராஜன் விளம்பர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 2. அடுத்தக் கூட்டத்தில் நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

வேலூர்:—1—2—50 அன்று கோ. கிருட்டிணசாமி லைசில் கடையில் தோழர் எ கிருட்டிணன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடந்தேறியது. அதுசமயம் நிதி உறுப்பினர் தோழர் வி. கே. நாராயணசாமி அவர்களின் ராஜினாமாவை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. கழகத்தின் வரவு செலவுகள் சமர்ப்பித்து, கூட்டத்தினரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1 வடஆர்காடு மாவட்ட செயற்குழுவிற்கு தோழர்கள் கோதண்டன், ஜி. சிட்டிபாபு. கே. சுப்பிரமணியம் இவர்களை இச்செயற்குழு நியமித்திருக்கிறது.

2 வடஆற்காடு ஜில்லா திராவிடமுன்னேற்றக்கழக மாநாட்டை வேலூரில் நடத்தவேண்டுமென ஜில்லா திராவிட முன்னேற்றக் கழகச் செயற் குழுவைக் கேட்டுக் கொள்கிறது.

3 குடியேற்றநாட்டு அந்தஸ்து தினவிழாவில் வெகுநாட்களாக பறந்துகொண்டிருந்த நமது கழகக் கொடியை, முன்னெச்சரிக்கையாதுமின்றி, திருவண்ணாமலை போலீஸ் டிபுடி சூப்பிரிண்டெண்டெண்டு அவர்கள் வந்து தன்னுடைய ஆட்களிடம் சொல்லி, அறுத்து எடுத்துக்கொண்டுபோய், இன்னமும் கொடாமல் இருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது நிதி உறுப்பினராக. தோழர் ஜி. சிட்டிபாபு அவர்களை இச்செயற்குழு நியமித்திருக்கிறது.

* * *

வேலூர் (சேலம்):—1—2—50 இரவு 7 மணிக்கு தோழர் வி. எ. ராமநாதன் அவர்கள் இல்லத்தில், தோழர் வி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில், செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(சேலம்) மாவட்டப் பிரதிநிதிகளாக தோழர்கள் வி. கே. இலக்குமணன், வி. எ. ராமநாதன் ஆகியோரை தேர்ந்தெடுக்கப்பட்டது. செயற்குழுவினரிடத்தில் கழக வேலைக்கு ரூபாய் ஒன்று வீதம் நன்கொடை வசூலிப்பது. மற்ற செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவரிடமும், மாதம் அணா (எட்டு) 0 8 0 வசூலிப்பது.

தோழர்கள், கே. அமீர், கே. சண்முகம் ஆகியோரை செயற்குழு உறுப்பினராக சேர்த்து கொள்வது.

* * *

மணப்பாறை:—திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் கூட்டம் 30-1-50 தேதி மாலை 7 மணிக்கு தோழர் மூ. தங்கையாம் வீட்டின் மாடியில் துணைச்செயலாளர் தோழர் க. அடைக்கலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துவக்க விழா கூட்டத்தில் நடைபெற்ற வரவு செலவு கணக்கு:- வரவு 54-12-6 செலவு 52 8-6 மீதி இருப்பு 2-3 6 என்று காண்பித்து அங்கீகரிக்கப்பட்டது. பின்பு தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்களையும், தோழர் என். வி. நடராசனையும் மணப்பாறை தி. மு. கழகத்தின் சார்பில் அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

விளம்பர உறுப்பினர் தோழர் அ. ஆறுமுகம் அவர்கள் கொடுத்த ராஜினாமாவை அங்கீகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. கீழ்கண்ட விளம்பர உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் என். கோதண்டராமன். என். வடிவேல். மேலே கண்ட கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இரவு 8 30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

தி. மு. கழகக் கூட்டங்கள்

9—2—50

பட்டிவீரன்பட்டி:—(மாலை)	சி. என். அண்ணாதுரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன்.
திண்டுக்கல்:—(இரவு)	சி. என். அண்ணாதுரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன்,

10—2—50

மதுராந்தகம்:—	சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம்.
(மதுரை மாவட்டம்) கூடலூர் கம்பம் தேனி	சி. எம். அண்ணாத்துரை என். வி. நடராசன், என். ஜீவரத்தினம்.

11-2-50

சென்னை (மௌண்ட் ரோடு):—	இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு
(மதுரை மாவட்டம்) போடி (காலை) பெரியகுளம் (மாலை)	சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன், என். ஜீவரத்தினம்.

பணியும்வரை பகிஷ்காரத்தைக் கைவிடமாட்டோம்

—(o)—

தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியாவின் எச்சரிக்கை!

கேப்டவுன், பிப். 6—

பாகிஸ்தான் தென்னாப்பிரிக்காவுடன் வர்த்தகத்தடையை நீக்கியதுபோல், தானும் செய்ய இந்தியா முடிவு செய்வதில்லை என்று இந்தியா தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் தென்னாப்பிரிக்காவுடன் வர்த்தகப் பகிஷ்காரத்தை ஆரம்பித்து 4 ஆண்டுகளாகின்றன. இதனால் தென்னாப்பிரிக்காவுக்கு ஆண்டில் 10 லக்ஷம் பவுன்கள் நஷ்டமேற்பட்டிருக்கிறது. சணல், தோல் முதலியவை கிடைக்காமல் தென்னாப்பிரிக்கா மிகவும் சிரமப்பட்டுவருகிறது

எந்தக் காரணத்திற்காக இந்த வர்த்தக பகிஷ்காரம் இந்தியாவினால் ஏற்படுத்தப்பட்டதோ, அந்தக் காரணம் இன்னுமிருந்தே வருகிறது. இந்தியர்களை விரட்டியே தீருவோம் என்ற மலான் சர்க்கார் இன்னும் கைவிட்டபாடில்லை அத்துடன் தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை தன் நாட்டின் சொந்த விவகாரம் என்று மதிக்கப்படவேண்டும் என்று தென்னாப்பிரிக்க சர்க்கார் கூறிவருகிறது. ஆகவே தென்னாப்பிரிக்க சர்க்கார் அங்குள்ள இந்தியர் விஷயமாக பணியாதவரையில் இந்த வர்த்தக பகிஷ்காரம் எடுபடுவது சந்தேகமே என்று கூறப்படுகிறது.

இந்தப் பூர்வாங்க மாநாட்டில் ஒரு சமரசம் ஏற்பட்டு, வர்த்தக பகிஷ்காரம் எடுபட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டால், தென்னாப்பிரிக்காவுடன் ஸ்தானிக உறவு உடனே ஏற்படுத்தப்படலாம்.

கொழும்பு மாநாட்டின் விளைவாக இம்மூன்று தேசங்களிடையே சௌஜன்ய உறவு நிலைத்திருக்கிறது என்றே சொல்லலாம் என்று கூறப்படுகிறது.

க்ஷய நோய் தடுக்க; சானல் தீவில் ஏற்பாடு

லண்டன், பிப். 6—

க்ஷயரோகத்தை அடியோடு ஒழிக்க சானல் தீவான ஜெர்ஸியின் எல்லா குழந்தைகளுக்கும் பி ஸி ஜி வாக்ஸின் குத்தவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 5 ஆண்டிற்குப்பின் இந்தப் பரீட்சை என்ன பலனைத் தருகிறதென்று பார்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரை உற்பத்தியும் கையிருப்பும்

இந்தியாவிலுள்ள மத்திய சர்க்கரை ஆலைகளில் 1949 டிசம்பர் 31-ந் தேதியுடன் முடிவடைந்த இரண்டு வார காலத்தில் சர்க்கரை ஆரம்பக் கையிருப்பு, 17,91,000 மணங்கும். உற்பத்தி 32,68,000 மணங்கும், வெளியே அனுப்பியது 9,09 000 மணங்கும், இறுதியில் கையிருப்பு 41,50,000 மணங்குமாக இருந்ததாக, 1935-ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி விதிகளின் கீழ் தமக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரியவருவதாக, கான்பூர் இந்திய சர்க்கரைத் தொழில் முறை ஆராய்ச்சிக் கழக டைரெக்டர் அறிவிக்கிறார். முந்திய ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் இந்த அளவுகள் முறையே 54,36,000 மணங்கும், 18,02,000 மணங்கும், 14,37,000 மணங்கும், 58 01,000 மணங்குமாக இருந்தது.

பரிசீலனை காலத்துக்கான புள்ளி விவரங்கள் இந்தியாவின் மொத்த உற்பத்தி சக்தியில் 96·83 சதவிகிதம் கொண்ட 128 ஆலைகள் பற்றியவையாகும். முந்திய ஆண்டு புள்ளி விவரங்கள் மொத்த உற்பத்தி சக்தியில் 94·59 சதவிகிதம் கொண்ட 124 ஆலைகள் பற்றியவையாகும். 1949 நவம்பர் முதல்தேதியிலிருந்து இதுவரை மொத்தம் 50,95,000 மணங்கு சர்க்கரை உற்பத்தியாகியிருக்கிறது; 20,99,000 மணங்கு ஆலைகளிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. முந்திய ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் இந்த அளவுகள் முறையே 29,99,000 மணங்கும், 35,09,000 மணங்குமாக இருந்தன.

நாட்டு நடப்பு

:(0):

வள்ளுவர் நினைவு விழா

சென்னை, பிப். 3—

1—2—50 அன்று மாலை 6 மணிக்கு சென்னை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், "வள்ளுவர் நினைவு நாள் விழா" சென்னை குளை, தொட்டிக்கலை வைரப்பமூரலித் தெருவிலுள்ள இந்து ஒற்றுமைக் கழக உயர் நிலைப் பள்ளியில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் தேவசேனாபதி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ. சே. எஸ். மகாதேவன் எம். ஏ. முதலியோர் "வள்ளுவர் நெறி" என்னும் பொருள் பற்றி விரிவாகப் பேசினார்கள். பின்னர் இரவு 9 மணிக்கு நன்றி கூறலுடன் விழா இனிது முடிந்தது.

* * *

விந்தியப்பிரதேச தினம்

16—1—50 மாலை 5 மணிக்கு தோழர் அ. சுப்ரமண்யம் தலைமையில் நடந்த (கதவடைப்புக்) கூட்டத்தில் விந்தியப்பிரதேசத்தில் மக்கள் நடத்திவரும் அமைதியாக கிளர்ச்சியை எதேச்சதிகாரமான அடக்குமுறையை அங்கு சர்க்கார் ஏவிவிட்டிருக்கும் அடக்குமுறைகளை விளக்கியும் கூறப்பட்டு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

"விந்தியப் பிரதேசத்திலுள்ள 35 லட்சம் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை அளிக்காத அந்த எதேச்சாதிகார ஆட்சி நடத்திவரும் வகுதவக்தோர் ஓட்டுரிமை அடிப்படையில் பொதுத் தேர்தலுக்காகவும், ஜனநாயக ஆட்சிக்காகவும் அமைதியாகக் கிளர்ச்சி செய்து வரும் மக்கள் மீது கடுமையான அடக்குமுறை பாணங்களை ஏவிவிட்டு பல தோழர்களைக் கொன்று குவித்துவரும் விந்தியப் பிரதேச சர்க்காரையும், இந்திய சர்க்காரின் சமஸ்தான இலாகாவையும் இக்கூட்டம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

"கொடிய அடக்குமுறைகளையும் மானக்கெட்ட சூழ்ச்சிகளையும் எதிர்த்து நின்று, ஜனநாயக ஆட்சி ஏற்படுத்துவதற்காக போராடிவரும் விந்தியப்பிரதேசத்தின் வீரமிக்க மக்களை இக்கூட்டம் பாராட்டுகிறது. தம் பிரதேசத்திற்கு இரையான தோழர்களுக்குத் தலை வணங்குகிறது. போராட்டத்திற்கு தனது மனப்பூர்வமான தார்மீக ஆதரவையும் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது"

உயிர் நீத்த தோழர்களுக்குக் கூட்டம் எழுந்து நின்று வணக்கம் செலுத்தியது.

* * *

பகுத்தறிவுப் படிப்பகத் திறப்பு விழா

மேட்டுப்பாளையம், ஜன. 20—

முசிறி வட்டம் மேட்டுப்பாளையத்தில் 15 1.50 ஞாயிறு முற்பகல் 10-மணிக்கு அஞ்சல் நிலையத் தலைவர் தோழர் செ. பசுபதி அவர்கள் தலைமையில் ஆசிரியர் தோழர் டி. சிவப்பிரகாசம் அவர்கள் இல்லத்தில் டீ விழா நடைபெற்றது. தோழர் பா. நாராயணன் அவர்கள் படிப்பகத்தைத் திறந்து வைத்து பகுத்தறிவு என்றால் என்ன? படிப்பகம் ஏன் அவசியம் என்பவைகளை மிகவும் தெளிவுற எடுத்துக் கூறினார். தலைவர் முடிவுரையில் படிப்பகத்தின் அவசியம்பற்றியும் படிப்பகத்திற்கு அவரவர்களால் இயன்ற அளவு உதவி செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

தோழர் செ. முத்துவீரன் அவர்கள் (முசிறி வட்ட ஈ. கி. கமிட்டிச் செயலாளர்) காந்தியார் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். முடிவில் படிப்பகத் தலைவரால் நன்றி கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடனும் இனிப்பு வழங்குதலுடனும் விழா இனிது முடிந்தது.

* * *

தாழ்த்தப்பட்டோரின் பொதுக்கூட்டம்

சென்ற 22—1—1950 தேதி காலை 9 மணிக்கு இராமனுதபுரம் ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் கிளைச்சபைகளாகிய கண்டராமாணிக்கம் நாடு, பட்டமங்கலம் நாடு ஆகிய நாடுகளின் 40 கிராமங்களின் மாபெரும் கூட்டம் வெளிய ரியில் உள்ள தென்னக்கோப்பில் சம்மேளனத்தின் செயலாளர் எம். இராமதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் சம்மேளனத் தலைவர் பி. ஜே. முத்தையா அவர்கள், கள்ளிப்பட்டு சோ. பெரியாம்பிளை அவர்கள், வெளியாத்தூர் செ. மாயன் அவர்கள், கானைார் மங்கலம் வி. மாயன் அவர்கள் கண்டராமாணிக்கம் அ. சி, சின்னையா அவர்கள் ஆகியோர் சமூக முன்னேற்றம், கல்வி, சுகாதாரம், ஆகியவைகளைப் பற்றி மிக விளக்கமாக சொற்பொழிவாற்றினர்.

அடியிற் கண்ட தீர்மானங்கள்! கள்ளிப்பட்டு சோ. பெரியாம்பிளை அவர்களாலும், சோ. நாட்சியப்பன் அவர்களாலும் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்

(1) சர்க்கார் சட்டத்தை அநுசரித்தும் சமூக முன்னேற்றத்தை கருதியும் இரண்டு நாட்டினரும் மாட்டு மாமிசம் தின்பதில்லை என்று இக்கூட்டம் பிரதிக்ஞை எடுத்துக்கொள்கிறது.

(2) சர்க்கார் சட்டப்படி காப்பி ஓட்டல், சலவைத் தொழிற்சாலை, சிகை அலங்காரச்சாலை முதலியவைகளை வேற்றுமை இல்லாது உபயோகித்துக்கொள்ள எல்லோரும் தீவிரமாய் ஈடுபாடாய்படி கங்கணம் கட்டிக்கொள்கிறது.

(3) தம்பட்டம் அடிக்கும் விஷயமாக கமிட்டியாளர் முடிவு செய்கிறபடி சங்கம் கேட்ட விருப்பம் போல் தொழிற்செய்வதென முடிவு செய்யப்பட்டது.

(4) இரு நாடுகளின் வளர்ச்சிக்கும்; நன்மைக்கும் பத்துப் பேர் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

(5) கருங்குளம் கிராமத்தில் நமது மாவட்ட பெடரேஷன் தலைவர் முத்தையா முதலிய இன்னும் ஒன்பது பெயர் பேர்களில் நமது சமூகத்திலுள்ள ஒரு துரோகியை பிடித்து ஜாதித் துவேஷ ஆசாமிகள் தண்டி கிரிமினல் கேஸ் போட்டிருப்பதை அறிந்து இக்கூட்டம் வருந்துவதோடு, இந்த வழக்கு முழுப் பொய் என்பதை சர்க்காருக்கு வணக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறது. பிறகு கூட்டம் மாலை 3 மணிக்குள் இனிது முடிவுற்றது.

* * *

திருவள்ளுவர் திருநாள்

பெண்ணாடம், பிப். 5—

3—2—50 மாலை 4 மணிக்கு பெண்ணாடத்தைத் தமிழ்ச் சங்கம்-வேதகுநாதன் கழகம் ஆகியவைகளின் சார்பில் ஓர் பெரிய ஊர்வலம் நடைபெற்றது.

பின் இவ்வூர் உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தோழர் ம. கோவிந்தசாமி பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது. தலைவர் முன்னுரையாக குறளைப்பற்றிப் பேசியதின் பிறகு பேசிய சொற்பொழிவாளரு அண்ணாமலை உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தோழர் சுவாமிநாதன் எம். ஏ. எல். டி. அவர்களும் வள்ளுவன் வாழ்க்கை வரலாறுபற்றியும் குறளின் பெருமை பற்றி குறித்து பேசிய பின் நன்றி நவில விழா இனிதுடன் முடிவுற்றது.

* * *

தெ. இ ஆதித்திராவிட மகாஜன சங்கம்

பம்பாய், ஜன. 31—

மேற்படி சங்கத்தின் 1ம்-வது ஆண்டு உறுப்பினர்களின் பொதுக் கூட்டம், 26—1—50ந் தேதி மாலை பம்பாய், தாராவி கணேசர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. முதலாவதாக சுமார் 350-க்கு மேற்பட்ட உறுப்பினர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டது. நாட்டு கொடிகளாலும்—கட்சித் திர கொடிகளாலும் அம்பேத்காரின் உருவப்படங்களாலும், சங்க அலுவலகமும் கூட்ட மண்டபமும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. கூட்டத்திற்குத் தலைமை வகித்த சங்கத்தின் தலைவர் தோழர் ஓ. ச. அய்யாசாமி அவர்களின் ரத்ன சுருக்கமான தலைமை புரைக்குப் பின், தோழர் ந. சிவ பாண்டியன் அவர்களால் ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு ஏகமனதாக சத்துடன் நிறைவேறியது.

பின். 1945—49-ம் ஆண்டு அறிக்கைகளையும் தணிக்கை செய்யப்பட்ட வருமான செலவு கணக்குகளையும், இருப்பு பொறுப்பு பட்டியல்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சொத்துக்கள் உட்பட இருப்பு ரூ. 20366 10-3 அணா அறிவிக்கப்பட்டது.

மீதமும் ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தேவைப்படும்போது இன்னும் பேர்களை நிர்வாக கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டது.

கடைசியாக, செயல் குழுவினருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

மாற்றுக் கருத்துகளுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தான் இப்படிப்பட்ட நிலையே வந்திராது. இடைக்காலத்தில் வள்ளுவரின் குறள் நீதி புறக்கணிக்கப்பட்ட காரணத்தால் தான் ஓமந்தூரார் சொல்வதுபோல், அரசனும் ஆண்டியும் ஒன்றெனும் பண்பாடு சிதைந்துபோயிற்று.

ஒரு சிறந்த பண்பாடு சிதைந்துவிட்டது பிற்காலத்தில் என்று, சுட்டிக்காட்டும் அளவோடு நிறுத்திவிட்டார் ஓமந்தூரார். தெரிந்தோ தெரியாமலோ அப்படிப்பட்ட ஒரு சிறந்த பண்பாடு சிதையக் காரணம் என்னவென்பதை விளக்க அவர் தவறிவிட்டார். அவர் செய்யத்தவறியதை நாம் செய்கிறோம், அதுதான் ஆரியம்—திராவிடம் என்று பேசப்படுவதாகும். இப்பிரச்சினை ஓமந்தூரார் போன்றவர்களுக்கு உடன்பாடாக இல்லாதிருக்கலாம். ஆனால் அடிப்படை உண்மையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இடைக்காலத்தில் தோன்றிய சீர்கேடு மாறி, மக்கள் அனைவரும் ஒரேகுலத்தினர் என்ற நிலை ஏற்பட வேண்டுமானால், அந்தச் சீர்கேடுகளுக்குரிய காரணங்கள் விளக்கப்பட்டே ஆகவேண்டும். ஆனால் இந்த விளக்கம் ஆக்கவேலைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதுதான் நமது நோக்கமேயன்றி, தனிப்பட்டோர் யாரிடமும் நமக்குப் பகைமையோ குரோதமோ கிடையாது; இதனை அறிந்து, ஆவன செய்ய ஓமந்தூரார் போன்றோர் ஒய்ந்த வேளைகளில் தமது சிந்தனையைச் சற்றுச் செலவிட்டுப் பார்க்க வேண்டும். அஃதொன்றே நம் அனைவரையும் புத்துலகிற்கு அழைத்துச் செல்லும் வழி.

வைத்திய வள்ளல்

ஈ.வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவு

ஈரோட்டில்

அனுதாபக் கூட்டம்

19-2-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும்

பல கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொள்வர்

முழு விவரம் பின்னர்வரும்

S. R. சந்தானம்,

செயலாளர், ஈரோடு தி. மு. கழகம்.

திருவண்ணாமலை தி. மு. கழகம்

வைத்திய வள்ளல் மறைவுக்கு துக்கம்

பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

திருவண்ணாமலை, பிப், 7—

5—2—50-ல, திருவண்ணாமலை தி. மு. கழக சார்பில பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என. வி. நடராசன், எ. வி. பி. ஆசைத்தம்பி முதலியோர் பேசுவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

மாலை 5 மணிக்கே ஏராளமான மக்கள் கூடிவிட்டனர் இந்நிலையில் திருவண்ணாமலை வந்துசேர்ந்த தோழர் என். வி நடராசன் அவர்களிடம், வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி மறைவு பற்றிய செய்தி கூறப்பட்டது.

பொதுக்கூட்டத் தலைவரும் திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவருமான தோழர் ப. உ. சண்முகம், போளூர் சுப்பிரமண்யம், உள்ளூர் கழக நிர்வாகிகள் அனைவருடனும் தோழர் என். வி. என் கலந்து பேசி, ஈ. வெ. கி. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் கூட்டத்தை ஒத்தி வைத்துவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், பொதுக்கூட்ட மேடைக்கு தோழர்கள் ப. உ. சண்முகம், என். வி. என், போளூர் சுப்ரமண்யம் ஆகியோர் சென்றனர்.

கூட்டத் தலைவர் ப. உ. சண்முகம், பெரியாரின் சகோதரரும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் தந்தையாருமான வள்ளல் ஈ. வெ, கி. மறைவு குறித்து வருந்தி, கூட்டத்தை ஒத்திவைப்பதாகக் கூறினர்.

மக்கள் பெரும் மனவேதனையுடன் திரும்பினர்.

ஆஸ்திரேலியாவில் மீண்டும்பொது தேர்தல்!

கான்பரா, பிப். 7—

ஆஸ்திரேலியாவின் தொழிற் கட்சி தன் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு இவ்வருஷத்திலேயே மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தும்படி ஏற்படுத்தும் என்பதை ஆஸ்திரேலியத் தொழிற் கட்சி விக்டோரியா கிளையின் தலைவர் தோழர் ரெஜினால்ட் பிராட்லி ஜாடையாகக் குறிப்பிட்டார்.

அறிவிப்பு

ரெஜினு மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

தேவை

படங்களுக்கு கண்ணாடி சட்டங்கள் போடத்தெரிந்த ஒருவர்தேவை. விவரங்களுக்கு: c/o மாலைமணிமண்ணடிசென்னை-1

வைத்திய வள்ளலின் மறைவுக்கு வருத்தம்

பெத்துநாயக்கன்பேட்டை தி. மு க. செயற்குழு

பெத்துநாயக்கன் பேட்டை தி. மு. க, செயற்குழு கூட்டம் 7-2-50 மாலை 6-மணிக்கு, கூடியது. தோழர் ஈ. வே. கி சம்பத் தலைமையாரும், பெரியார் ஈ வே ரா. அவர்களின் சகோதரருமாகிய வைத்திய வள்ளல் ஈ. வே. கி. மறைவுக்கு வருந்தி ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என செயலாளர் டி. ராமசிவம் அறிவிக்கிறார்.

கனடாவில் உரேனியம்

மாண்ட்ரீல், பிப். 7—

க்யூபெக் மாகாணத்தில் உரேனியம் அகப்படுகிறதென்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. லாரென்ஸ் நதிகரைப் பிரதேசங்களில் இது கல்லுடனும், மண்ணுடனும் கலந்து காணப்படுவதாக கூறப்படுகிறது.

காட்டு விலங்குகள் நாட்டில்படையெடுப்பு

காட்டுப் பிரதேசங்களில் தாங்க முடியாத குளிர் ஏற்பட்டிருப்பதின் விளைவாக ஆல்பர்டா, ஸஸ்காட்செவான் ஆகிய இடங்களில் கொடிய விலங்குகள் நகர பிரதேசங்களுக்குள் வந்துவிட்டன.

தேவை !

நமது "மாலை மணி"யை விற்பனை செய்வதற்கு, கீழ்க்கண்ட இடங்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

திருவாரூர்
கும்பகோணம்
காரைக்கால்
தஞ்சை
மானமதுரை
நெல்லிக்குப்பம்,
சீர்காழி
பண்ணுருட்டி

நிர்வாகி, "மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1